DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | CC. No. 243 of 2022 |
| Deposition of witness for | : | PW1 |
| Name | : | சின்னு |
| Father's Name | : | தோமஸ் |
| Village | : | மார்ட்ஹள்ளி |
| Taluk | : | கொல்லேகால் |
| District | : | சாம்ராஜ் நகர் (கர்நாடகா மாநிலம்) |
| Profession | : | கூலி |
| Age | : | 46 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 10th day of April 2026.

எதிரி ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

முதல் விசாரணை :–

நான் தற்போது கர்நாடகா மாநிலம், மாதேஸ்வரன் மலைக்கு அருகில், மார்ட்அள்ளி, சாம்ராஜ் நகரில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். என்னுடன் டேவிட் என்கிற பாஸ்கரன் வேலை செய்து வந்தார். அவரும் எங்கள் ஊரைச் சேர்ந்தவர். சுமார் 20 வருடத்திற்கு முன்பு நானும் டேவிட் என்பவரும் வேலை செய்து கொண்டிருந்தோம். அப்போது டேவிட் என்பவர் டீக்கடைக்கு டீ சாப்பிட செல்வதாக சொல்லி விட்டு சென்றார். பிறகு நானும் மேஸ்திரியும் சென்றோம். சந்தாரப்பள்ளி அருகே ஜெகதேவி பக்கம் இருந்து வந்த இரு சக்கர வாகனம் டேவிட் மீது மோதி விபத்து ஏற்பட்டது. நானும் மேஸ்திரியும் பர்கூர் அரசு மருத்துவமனைக்கு கூட்டிக் கொண்டு போனோம். அதன்பிறகு தர்மபுரி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். அங்கு 20 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார். நான் மருத்துவமனையில் இருக்கும்போது போலீசார் வந்து விசாரித்தனர். நான் தான் விபத்து குறித்து வாக்குமூலம் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

ஆஜர் எதிரி தான் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லும் வரை அவர் விபத்து நடந்த இடத்தில் தான் இருந்தார். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–</u>

சம்பவம் நடக்கும்போது நான் கோரையில் இருந்தேன். ஸ்ரீ கிருஷ்ணா கிரானைட்ஸ் கோரையில் இருந்தேன். காலை 07.30 மணியளவில் மேஸ்திரிக்கு தகவல் வந்தது. அரை மணி நேரத்தில் சம்பவ இடத்திற்கு சென்று விட்டேன். எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அந்த சமயத்தில் இருந்த வாகனத்தின் பதிவு எண் தெரியுமா என்றால் தெரியாது. வாகனத்தின் பெயர் தெரியுமா என்றால் தெரியாது.

<u>மறு விசாரணை :–</u>

இல்லை.

M SANTHI

CHIEF JUDICIAL MAGISTRATE, KRISHNAGIRI.
Digitally signed by M SANTHI

தலைமை குற்றவியல் நடுவர்,
கிருஷ்ணகிரி.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | CC. No. 243 of 2022 |
| Deposition of witness for | : | PW2 |
| Name | : | ஜான் பீட்டர் |
| Father's Name | : | மதலை முத்து |
| Village | : | மார்ட்அள்ளி |
| Taluk | : | கொல்லேகால் |
| District | : | சாம்ராஜ் நகர் (கர்நாடகா) |
| Profession | : | கூலி |
| Age | : | 57 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 10th day of April 2026.

எதிரி ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை :–</u>

நான் தற்போது கர்நாடகா மாநிலம், மாதேஸ்வரன் மலைக்கு அருகில், மார்ட்அள்ளி, சாம்ராஜ் நகரில் குடியிருந்து வருகிறேன். நான் கோரையில் கூலி வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன டேவிட் என்பவர் என்னுடன் டேவிட் என்கிற பாஸ்கரன் கோரையில் வேலை செய்து வந்தார். அவரும் எங்கள் ஊரைச் சேர்ந்தவர். சுமார் 20 வருடத்திற்கு முன்பு நானும் டேவிட் என்பவரும் ஸ்ரீ கிருஷ்ணா கிரானைட் குவாரியில் வேலை செய்து கொண்டிருந்தோம். காலை 06.00 – 07.00 மணியளவில் டேவிட் என்பவர் டீக்கடைக்கு டீ சாப்பிட போனபோது இரு சக்கர வாகனம் மோதி சந்தாரப்பள்ளி அருகே ஜெகதேவி பக்கம் இருந்து வந்த இரு சக்கர வாகனம் டேவிட் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக அங்கிருந்தவர்கள் சொன்னார்கள். பக்கத்தில் தான் கோரை இருந்தது. நானும் சின்னு, மற்ற நிறைய நபர்கள் சென்று போய் பார்த்தோம். பிறகு பர்கூர் அரசு மருத்துவமனைக்கு கூட்டிக் கொண்டு போனோம். அங்கு ஆகாது என்று சொன்னதால் தர்மபுரி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்

சென்றோம். அங்கு 10-20 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார். அதன்பிறகு இறந்து விட்டார். பிரேத விசாரணையின் போது உடனிருந்தேன். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

நான் கர்நாடகா மாநிலம் மார்ட்அள்ளியில் குடியிருந்து வருகிறேன். அவரை எப்படி தெரியும் என்றால் கோரையில் ஒன்றாக வேலை செய்து வந்தோம். சம்பவம் நடந்த தேதி, வருடம் தெரியுமா என்றால் ரொம்ப நாள் ஆகி விட்டதால் தெரியவில்லை. சம்பவத்தை கேள்விப்பட்டு தான் போய் பார்த்தேன் என்றால் சரிதான். ஒரே ஊர்க்காரர் என்பதாலும், ஒரே கம்பெனியில் வேலை செய்து வந்ததாலும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை :-</u>

இல்லை.

M SANTHI

CHIEF JUDICIAL MAGISTRATE, KRISHNAGIRI.
Digitally signed by M SANTHI

தலைமை குற்றவியல் நடுவர்,
கிருஷ்ணகிரி.